**<u>Crlmp No.101/2025</u>**
**in**
**SC.No.63/2021**
**Date: 11.03.2026**
**<u>Order pronounced.</u>**

மனுதாரர்/அரசுத்தரப்பு இம்மனுவை பிரிவு 311 கு.வி.மு.ச பின் கீழ் புலன் விசாரணையின் போது அ.சா.1 மற்றும் அ.சா.2க்கு சிகிச்சை வழங்கிய மருத்தவரை விசாரிக்காமல் விடுபட்டதை தற்போது சாட்சியாக விசாரிக்க அனுமதி கோரி தாக்கல செய்துள்ளது.

2) எதிர்மனுதாரர்/எதிரிகள் தரப்பிற்கு அறிவிப்பு கொடுக்கப்பட்டது. எதிருரை தாக்கல் செய்யப்பட்டது, இருதரப்பும் கேட்கப்பட்டு வழக்கு ஆவணங்கள் கவனமாக பரிசீலிக்கப்பட்டது,

3) மனுதாரர் தனது மனுவில் வழக்கு சம்பவததின் போது காயம்பட்ட சாட்சிகளுக்கு சிகிச்சை வழங்கிய மருத்துவர் திரு. ஷாஜி S. ஜெய்திஸ் என்பவருக்கு பதிலாக வேறு மருத்துவரான மருத்துவர் திரு. அன்வர் சாதிக் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டு விட்டதாகவும், தற்போது காயச்சான்றுகளை பரிசீலனை செய்த போது அந்த விபரம் தெரிய வந்ததாகவும் என் மீது காயம்பட்ட சாட்சிகளுக்கு சிகிச்சை வழங்கிய மருத்துவர் திரு. ரோஷி S. ஜெய்வதிஸ் என்பவரை விசாரிக்க அனுமதி வழங்க வேண்டுமென குறிப்பிட்டுள்ளார்.

4) மாறாக எதிர்மனுதாரர் தரப்பு ஆட்சேபனையில் ஏற்கனேவ விசாரிக்கப்பட்ட மருத்துவர் காயம்பட்ட சாட்சிகளுக்கு சிகிச்சை எதுவும் வழங்கவில்லை என சாட்சியம் அளித்த பிறகு அரசுத்தரப்பில் விடப்பட்ட குறைபாடுகளை நிவிர்த்தி செய்ய எவ்வித முகாந்திரமுமின்றி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டது.

5) ஆவணங்களை பரிசீலனை செய்து பார்த்த போது மனுதாரர் கூறியுள்ளது போல் அ.சா.7 திரு. அன்வர் சாதிக் காயம்பட்ட சாட்சிகளுக்கு சிகிச்சை வழங்கவில்லை என்பதும் மனுவில் குறிப்பிட்டுள்ள மருத்துவர் திரு.ஷாஜி S. ஜெய்திஸ் அவர்கள் தான் சிகிச்சை வழங்கியுள்ளார் என்பது தெரிய வருகிறது. சாட்சி புதிய சாட்சி அல்ல. மேலும் அவரை விசாரிப்பதால் எதிரிகளுக்கு ஈடுசெய்ய முடியாத இழப்பு எதுவும் ஏற்படபோவதில்லை ஆனால், மனுவை அனுமதிக்காவிடில் மனுதாரர்/அரசுதரப்பிற்கு ஈடுசெய்ய முடியாத இழப்பு ஏற்படும் எனவே இம்மனுவை அனுமதிக்கலாமென இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

முடிவாக மனு அனுமதிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை

சார்பு நீதிபதி,
பத்மனாபபுரம்